# அருளாளன் அந்தாதி




இரங்கினான் இக்கிள்ளை சொல் வாய்மொழிக்கே
செருக்கினான் செய்தயென் பிணியறுத்தே
குரக்கினான் வந்த மானிடப் பிறப்பறுத்தே
உருக்கினான் தன்வடிவு காட்டி !! 36

காட்டினான் கமலபாதம் கரிகிரிக் கடவுளெந்தை - கோதை
சூட்டிக்களைந்த மாலை சூடிக்களித்த பெம்மான் - பாவை
நாடிக்கொடுத்த வைந்தும் ஐயைந்தும் - தினம்
பாடிப் பாடிப் பாடித் திரிவனே ! 37

திரிபுரம் எரித்தவன் சாபம் ஒழியவே யருளி
பிரிதொருநாள் பிரம கபாலம் வீழ்வித்தான்

கண்டியூர் கச்சியென்றே  கலியனேத்தும் உருவினை
கண்ட கண்கள் மற்றொன்றைக் காணாவே !! 38

காணாதே கண்டகண்கள் கரிநெடியார்க் கடிமைபூண்டு
நாணாதே நற்றமிழால் நாரணனை பாடிவைத்தேன்
மாவலியின் மாவலியைசெற்ற  மாதவனும் தன்
மாவடிவம் காட்டினான் மகிழ்ந்து !! 39

மாவடிகண்ட மறையனும் தன்கமண்டல நீரெடுத்துன்
சேவடி துலங்கவே மஞ்சனமாட்டினான் - அவன்மகன்
பிறையனுமப் புனிதநீரை தலைமேல் தாங்கியே
பறையறைந்தான் பரமனுனைப் பணிந்து !! 40

பணிந்தேன் - பரமனை பவித்திரனை பரமேட்டியை
நருந்தேன் நாற்றத்துழாய் மாலைகமழ் மார்வனை
அருந்தேன் அருமறை போற்றும் அருளாளனை; பின்
சிறந்தேன் சீர்மையில்லா பிறப்பொழித்தே !! 41

பிறப்பொழித்தாய் எந்தையென் இறப்பொழித்தாய்
செருக்கொழித்தாய் எந்தையென் சிறப்பொழித்தாய்
வெறுப்பொழித்தாய் எந்தையென் விருப்பொழித்தாய்
இருப்புணர்ந்தேன் எந்தையுன் உள்ளத்துள்ளே !! 42

உள்ளத்துள் உறைந்தவெந்தை உலகுண்ட பெருவயிற்றான்
பள்ளத்தே பாயும் நீராய் பாய்ந்து என்னுள் பரவிநின்றான்
மெல்லத்தன் விழியிரண்டால் நோக்கியென் அகந்திறந்தான்
சொல்லத்தானாமோ வரதாவுன்மேன்மை நாயினேன் நாணினேனே !! 43

நாணம் கொண்டேன் நாரணா நானுன்னை பாடுகையில்
காணும் பொருளில் லெல்லாம் உன்னுருவம் காணுகின்றேன்
பேணும் பெருந்தேவித் தாயுடனே நீயிருக்க
வேணும் பொருளில்லை நாநிலத்தில் உணர்ந்தேன்நான் ! 44

நானாய் என்னையெனக் குணர்த்திய யென்னீசன்
தானாய்த் தன்னையெனக்  குணர்த்தி வைத்தான்
வானாய் காற்றாய் எரியாய் நீராய் நிலனாய் - நீயே
ஆனாய் யென்னையும் ஆட்கொண்டருளாயே !! 45

ஆட்கொண்ட அருளாளனை அத்திகிரிக்கதிபதியை
பாற்கடல் பைந்நாகத் தரவணை பள்ளி கொண்டானை
நாற்றிசையும் போற்றும் நாயகனை நாரணனை
மாற்றொன்றில்லா மாதவனை பணிந்தே உயர்ந்தேனே !! 46

உயர்விலாச் சிறியேனை உயர்த்தியே உகந்தனன்
அயர்விலா அமரர்கள் அயனரன் முதல்வன்
மயர்விலா மதிநலம் அருளிய மாதவன்
துயரிலாத் தூயனின் சேவடித் தொழுவனே ! 47

தொழுதே உய்ந்தனன் தூயாநின் சேவடி
பழுதே போக்கினேன் பாவியேன் பாவியேனே
மகிழ்ந்தேன் இழிந்தேன் பிறந்தேன் இறந்தேன்
அழுதேன் அறிந்தேன் அருந்தேன் அரியை !! 48

அறிந்தனன் அரியினை கரிகாத்த கரியானை
தெரிந்தும் தெரியாமல் செய்தபிழை பொறுத்தானை
புரிந்தும் புரியாமல் திகழ்ந்திடும் நெடியானை
பணிந்தனன் மனத்துள் இருத்தி!! 49

இருத்தினேன் எந்தையை இருண்டவென் நெஞ்சினுள்ளே
பொருத்தினனேன் புந்தியை பூமகள் கேள்வனின்மேல்
அருந்தவத்தமரர் போற்றும்அருளாளன் அடிகளாய
மருந்தினை மாதவனை உணர்ந்தே உயர்ந்தேனே !! 50

உணர்த்தினானெனெந்தை மூவருள் முதல்வனென்றே
குணத்தினான் நிறைகளின்றி குறையனேன் அகந்திறந்தான்
மனத்தினான்மாசருத்தேன் வரதனுக்கே அடிமைபூண்டேன்
சினத்தினான் செற்றதேவன் மயக்கினான் மயங்கினேனே !! 51

மயங்கியே மாமலராள் மன்னியுறை திருமார்பா
தயங்கினேன் தவறுடையேன் தடுத்தென்னை ஆட்கொள்வாய்
பயந்தவிப் பாலகனின் பாவினுக்கு மனமிறங்கி
சிறந்தநின் சேவடியால் தீண்டாயோ கரிவரதா !! 52

கரிகிரிமேல் காவலனாய் நெடுவரையின் உச்சிமேலாய்
பரிதிமதி நயனமுடன் பனிவரையில் உறைவானாய்
அரியுருவாய் இரணியனின் வல்லாகம் கீண்டானாய்
பரிமுகனாய் மறையளித்தாய் புவியிடந்த ஏனத்தாய்
புரிசங்கம் சுடராழி திகழும்நல் திருக்கரத்தாய்
நெறியுடையார்க்கருள் புரிவாய் எனக்குமருள் புரிவாய்நீ 53

அருள்புரிவார் அவரிவரென்னு மதியிழக்காதீர் மானிடர்காள்
மருள்நீக்கும் மாமருந்து மாதவனின் மலரடிகள்
இருள்நீங்கும் அகம்மலரும் நலம்பெருகும் நமக்கென்றும்
கரிகிரியான் கடைக்கண் காணப்பெறின்! 54

பெற்றேனே பெரும்பேறு பெருந்தேவித் துணையானின்
உற்றோமே யானானேன் உளமுழுதும் தானிழந்தே
கற்றோரும் மற்றோரும் செற்றோரும் தாம்வியக்க
பெற்றானைப் பெற்றேன் நான் !! 55

பெற்றேனே நான் பெறற்கரிய பெரும்பேரு
சிற்றம் சிறியேன் எனக்குமருள் புரிந்தனனே
கற்றினம் மேய்த்தானம்மா கரிகிரிக் கடவுள் எந்தை
பொற்பதம் பணிந்தே பிறப்பறுத்தேன் புவியின்மீதே !! 56

புவியும் புவியின் உயிராம் நீரும்
நீரும் நீரின் உயிராம் நெருப்பும்
நெருப்பும் நெருப்பின் உயிராம் காற்றும்
காற்றும் காற்றின் உயிராம் வானும்
வானும் வானுள் உறையும் இறையும்
இறையும் உறையும் என்மனத் தறையும்
அறையும் அறையுள் அமர்ந்தவென்னரியும்

அரியும்மயனும்மரனும் மனைத்தும்
அனைத்தும் அறிந்தேன் அத்திகிரியடைந்தே!! 57

அத் திகிரிக்கையினான் எண்டிசைக்கும் இறைவனாய்
அத் திகிரிக்கைக்கொண்டு கஞ்சனவன் சிரம் கொண்டான்
அத்திகிரி மேல்நின்றே அவனடியார்க் கருள்கின்றான்
அத்திகிரி அருளாளன் அடியிணைகள் அடைந்தேனே !! 58

அடைக்கலமா யடைந்தவனை அருளாளன் எடுத்தணைத்தான்
படைக்கலனாம் பொறிஒற்றி பாற்கடலாள் அருகிலிட்டான்
கடைக்கடையேன் என்மீதும் கரிவரதன் கருணைகொண்டான்
அடையும் பொருள் என்றேதும் இனியில்லை காண் !! 59

காண்பதோர் உருவமெல்லாம் கரிகிரிக்கடவுள் எந்தை
பாண்டவர் தூதனம்மா பரிவுடன் பசுவினம் காத்தான்
வானுடன் காற்றாய்தீயாய் நீரொடுநிலனுமானான்
மானுடம் காக்கவந்த மாதவன் உருவம்தானே ! 60

உருவெல்லாம் ஓருருவம் கரிகிரியான் எழிலிலுருவம்
கருவிலே திருவில்லாத கடையனுக்கும் அருளுருவம்
பொன்னுருவம் பூவுருவம் எவ்வுருவும் அவனுருவம்
குன்றதன்மேல் நின்றருளும் வரதனடி பணிமனமே ! 61

வரதனடி பணிந்தார்க்கு மரணபயம் என்றுமில்லை
கருதவரம் தந்திடும் நம் கரிகிரிமேற் காவலனை
ஓருபுகல் இன்றிக்கே முழுமுதலாய் அடைந்தார்க்கு
மறுபிறவி ஒன்றில்லை மாதவனே ! உணர்ந்தேன் நான் !! 62

நானுணர்ந்தேன் மாதவனே ! மாமலராள் உறைமார்வா !
வானுயர்ந்த நெடுமாலே ! நானிலத்தோர் நாயகனே !
தேமதுரத் தமிழாலே தேடியுன்னைப் பாடுகின்றேன்
பூவுதிர்வாய் உதிர்த்துந்தன் பூங்குழலில் சூடாயோ !! 63

சூடிக்களைந்த நன்மாலைகள் சூட்டிக்களித்த இறைவ - அவள்
பாடிக் களித்தநின் செவிகளென் பாவினுக் கிறங்கிடுமோ - உனை

நாடித்தழுவி தினமுயிர் கூடிக் கலந்துருகிட - இசை
பாடிப் பரவியுனை தேடித் திரிவனே !! 64

